## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 2-4 - ஆடியாடி
### (நித்யசூரிகளோடு கூடப்பெறாமையால், மிக வாட்டமுற்று மயங்கிய பராங்குச நாயகியின் நிலையைத் தாய் கூறும் பாசுரம்)

2818 * ஆடியாடி அகம் கரைந்து * இசை
பாடிப் பாடிக் * கண்ணீர் மல்கி ** எங்கும்
நாடி நாடி * நரசிங்கா! என்று *
வாடி வாடும் * இவ்வாணுதலே 1

2819 வாணுதல் இம்மடவரல் * உம்மைக்
காணும் * ஆசையுள் நைகின்றாள் ** விறல்
வாணன் * ஆயிரம் தோள் துணித்தீர்! * உம்மைக்
காண * நீர் இரக்கமிலீரே 2

2820 இரக்க மனத்தோடு எரியணை *
அரக்கும் மெழுகும் * ஒக்கும் இவள் **
இரக்கமெழீர் * இதற்கு என் செய்கேன்? *
அரக்கன் இலங்கை * செற்றீருக்கே 3

2821 இலங்கை செற்றவனே! என்னும் * பின்னும்
வலங்கொள் * புள்ளுயர்த்தாய்! என்னும் ** உள்ளம்
மலங்க * வெவ்வுயிர்க்கும் * கண்ணீர் மிகக்
கலங்கிக் * கைதொழும் நின்று இவளே 4

2822 இவள் இராப்பகல் * வாய் வெரீஇ * தன
குவளையொண் * கண்ணநீர் கொண்டாள் ** வண்டு
திவளும் * தண்ணந்துழாய் கொடீர் * என
தவள வண்ணர் தகவுகளே 5

2823 தகவுடையவனே! என்னும் * பின்னும்
மிக விரும்பும் * பிரான் என்னும் ** எனது
அகவுயிர்க்கு * அமுதே! என்னும் * உள்ளம்
உக உருகி * நின்று உள்ளுளே 6

2824 உள்ளுளாவி * உலர்ந்துலர்ந்து * என
வள்ளலே! * கண்ணனே! என்னும் ** பின்னும்
வெள்ளநீர்க் * கிடந்தாய் என்னும் * என
கள்வி தான் * பட்ட வஞ்சனையே 7

2825 வஞ்சனே! என்னும் * கைதொழும் * தன
நெஞ்சம் வேவ * நெடிதுயிர்க்கும் ** விறல்

கஞ்சனை * வஞ்சனை செய்தீர்! * உம்மைத்
தஞ்சம் என்று * இவள் பட்டனவே! 8

2826 பட்ட போது * எழுபோதறியாள் * விரை
மட்டலர் * தண்துழாய் என்னும் ** சுடர்
வட்டவாய் * நுதி நேமியீர்! * நுமது
இட்டம் என்கொல் * இவ்வேழைக்கே? 9

2827 ஏழை பேதை * இராப்பகல் * தன
கேழில் * ஒண்கண்ணநீர் கொண்டாள் ** கிளர்
வாழ்வை வேவ * இலங்கை செற்றீர்! * இவள்
மாழை நோக்கு ஒன்றும் * வாட்டேன்மினே 10

2828 * வாட்டமில் புகழ் * வாமனனை * இசை
கூட்டி * வண்சடகோபன் சொல் ** அமை
பாட்டோர் * ஆயிரத்து இப்பத்தால் * அடி
சூட்டலாகும் * அந்தாமமே 11

**அடிவரவு:** ஆடி வாணுதல் இரக்கம் இலங்கை இவள் தகவு
உள்ளுள் வஞ்சனே பட்ட ஏழை வாட்டமில் அந்தாமம்